1994 மே 2] [திரு. டி. ஜெயகுமார்]

சீர் மரபினர் வகுப்புகள் மட்டுமே மைய அரசின் பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபட்டுள்ளன. பட்டுதுர்காஸ், தேவக்குடி தலையாரிகள். மேற்குறிப்பிட்ட இரண்டு வகுப்புகளையும் மைய அரசினுடைய பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து ஆணை பிறப்பிக்குமாறு மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே எந்த ஒரு சிறு தவறு அல்லது பிழை இருந்தாலும்கூட உடனடியாக விரைந்து செயல்படுகின்ற நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித்தலைவியினுடைய அரசு மைய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்து, நம்முடைய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினரைச் சேர்த்து, அனைத்து மக்களையும் பாதுகாக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன பதிலுக்கு நன்றி. நான் கேட்பது 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படுவது போல், இந்த 27 சதவீதத்திலே தமிழகத்திலே பிரிக்கப்பட்டிருப்பது போல, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினருக்குத் தனியாக ஏதாவது சதவீதத்தை ஒதுக்குவதற்கு இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறதா அல்லது பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படிதான் மண்டல் கமிஷன் தன்னுடைய அறிக்கையிலே இட ஒதுக்கீடு வெளியிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றது. எனவே, இது கொள்கை முடிவாக இருக்கின்ற காரணத்தால் இது சம்பந்தமாக உடனடியாக பதில் சொல்ல முடியாத நிலையிலே இருக்கிறோம்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 173 முதல் 191 வரையிலான 19 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12.20

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினைந்தாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவை முன்அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS